சுருக்கம்

பொருட்காட்சி – ஊராட்சி ஒன்றிய அளவில் சிறு கண்காட்சிகள் நடத்துதல் – 2012–13 நிதி ஆண்டில் 89 ஊராட்சி ஒன்றியங்களில் சிறு கண்காட்சிகள் நடத்துதல் – ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ.10,000/– வீதம் 89 ஊராட்சிகளுக்கு ரூ.8,90,000/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (பொருட்காட்சி)த் துறை

அரசு ஆணை (நிலை) எண்.118 நாள்.08.05.2012

திருவள்ளுவர் ஆண்டு 2043

சித்திரை 26

படிக்கப்பட்டது.

அரசு ஆணை (நிலை) எண்.337, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (பொருட்காட்சி)த் துறை, நாள்.29.12.2011.

-----

ஆணை:-

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15.07.2011 அன்று செய்தித் துறை ஆய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் “ஊராட்சி ஒன்றிய அளவில் சிறு கண்காட்சியினை நடத்தலாம்” என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

2) தமிழக அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வண்ணமாக பொருட்காட்சி நடத்துதல் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகிறது. சில மாவட்டங்களில் அரசுப் பொருட்காட்சி பொழுதுபோக்கு அம்சங்களுடன், அரசின் துறை வாரியாக அரங்குகள் அமைத்து நடத்தப்படுகின்றன. இவை தவிர, வருடாவருடம் அனைத்து மாவட்டங்களிலும் சிறு கண்காட்சிகள் (Mini Exhibitions) நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட அளவில் நடைபெறும் சிறு கண்காட்சிகளில் அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்டங்கள் தொடர்பானவைகள் மக்களிடையே நேரிடையாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது.

3) மாவட்ட அளவில் சிறு கண்காட்சி நடத்துவது போல், அரசின் நலத்திட்டங்களை குக்கிராமங்கள் வரை எடுத்துச் செல்லும் விதமாக ஊராட்சி ஒன்றிய அளவிலும் சிறு கண்காட்சி நடத்தலாம் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆய்வுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களில் அவ்வப்பொழுது நடைபெறும் முக்கிய திருவிழாக்கள், அரசின் போலியோ சொட்டு மருந்து முகாம்கள், நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா போன்ற நிகழ்வுகளின்போது ஊராட்சி ஒன்றிய மக்கள் பெருமளவில் வருகை புரிவர். அக்கால கட்டத்தில் அனைத்து துறைகளும் ஒருங்கிணைத்து, அரசின் நலத்திட்டங்கள், சாதனைகளை கண்காட்சி மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தலாம் என இத்துறை கருதுகிறது.

4) ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறவுள்ள சிறு கண்காட்சியில் மாவட்டத்தில் உள்ள அனைத்து துறைகளும் பங்குபெற்று துறையின் சாதனைகளை புகைப்படங்கள் மூலமும், மாதிரிகள்

மூலமும் கண்காட்சியினை நடத்த செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களைக் கேட்டுக்கொள்ளலாம். தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 32 மாவட்டங்களில் சென்னை தவிர்த்து மற்ற 31 மாவட்டங்களில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தியபடி இந்த 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் சிறு கண்காட்சியினை நடத்த இத்துறை முடிவுசெய்துள்ளது.

5) மேலே குறிப்பிட்டபடி ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ.10,000/– வீதம் மொத்தம் ரூ.38.50 இலட்சங்கள் செலவினத்தில் இரண்டாம் நடப்பு 2012–13 நிதி ஆண்டில் கீழ்க்கண்டவாறு 31 மாவட்டங்களிலுள்ள 89 ஊராட்சி ஒன்றியங்களில் சிறு கண்காட்சியினை நடத்த அரசு ஆணையிடுகிறது.

| வ.எண். | மாவட்டம் | ஊராட்சி ஒன்றிய எண்ணிக்கை 2012–13 | ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு நிதி ஒதுக்கீடு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 3 | ரூ.10,000/– | ரூ.30,000/– |
| 2 | திருவள்ளூர் | 3 | ரூ.10,000/– | ரூ.30,000/– |
| 3 | கடலூர் | 3 | ரூ.10,000/– | ரூ.30,000/– |
| 4 | விழுப்புரம் | 5 | ரூ.10,000/– | ரூ.50,000/– |
| 5 | வேலூர் | 4 | ரூ.10,000/– | ரூ.40,000/– |
| 6 | திருவண்ணாமலை | 4 | ரூ.10,000/– | ரூ.40,000/– |
| 7 | சேலம் | 4 | ரூ.10,000/– | ரூ.40,000/– |
| 8 | நாமக்கல் | 3 | ரூ.10,000/– | ரூ.30,000/– |
| 9 | தர்மபுரி | 2 | ரூ.10,000/– | ரூ.20,000/– |
| 10 | ஈரோடு | 3 | ரூ.10,000/– | ரூ.30,000/– |
| 11 | கோயம்புத்தூர் | 3 | ரூ.10,000/– | ரூ.30,000/– |
| 12 | நீலகிரி | 1 | ரூ.10,000/– | ரூ.10,000/– |
| 13 | தஞ்சாவூர் | 3 | ரூ.10,000/– | ரூ.30,000/– |
| 14 | நாகப்பட்டினம் | 3 | ரூ.10,000/– | ரூ.30,000/– |
| 15 | திருவாரூர் | 3 | ரூ.10,000/– | ரூ.30,000/– |
| 16 | திருச்சி | 3 | ரூ.10,000/– | ரூ.30,000/– |
| 17 | கரூர் | 2 | ரூ.10,000/– | ரூ.20,000/– |
| 18 | பெரம்பலூர் | 1 | ரூ.10,000/– | ரூ.10,000/– |
| 19 | புதுக்கோட்டை | 3 | ரூ.10,000/– | ரூ.30,000/– |
| 20 | மதுரை | 3 | ரூ.10,000/– | ரூ.30,000/– |
| 21 | தேனி | 2 | ரூ.10,000/– | ரூ.20,000/– |
| 22 | திண்டுக்கல் | 3 | ரூ.10,000/– | ரூ.30,000/– |
| 23 | இராமநாதபுரம் | 3 | ரூ.10,000/– | ரூ.30,000/– |
| 24 | விருதுநகர் | 3 | ரூ.10,000/– | ரூ.30,000/– |
| 25 | சிவகங்கை | 3 | ரூ.10,000/– | ரூ.30,000/– |
| 26 | திருநெல்வேலி | 4 | ரூ.10,000/– | ரூ.40,000/– |
| 27 | தூத்துக்குடி | 3 | ரூ.10,000/– | ரூ.30,000/– |
| 28 | கன்னியாகுமரி | 2 | ரூ.10,000/– | ரூ.20,000/– |
| 29 | கிருஷ்ணகிரி | 3 | ரூ.10,000/– | ரூ.30,000/– |
| 30 | அரியலூர் | 1 | ரூ.10,000/– | ரூ.10,000/– |
| 31 | திருப்பூர் | 3 | ரூ.10,000/– | ரூ.30,000/– |
| | மொத்தம் | 89 | – | ரூ.8,90,000/– |

6) மேலே பத்தி 5–ல் குறிப்பிட்டுள்ளவாறு 2012–13 நிதி ஆண்டில் ஊராட்சி ஒன்றியங்களில் நடத்தப்படவுள்ள சிறு கண்காட்சி தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள ஊராட்சி ஒன்றியம் ஒன்றிற்கு ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வீதம் 89 ஊராட்சி ஒன்றியங்களுக்கு மொத்தம் ரூ.8,90,000/– (ரூபாய் எட்டு இலட்சத்து தொன்னூறு ஆயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

7) மேலே பத்தி 6–ல் உள்ள ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“2220 செய்தி மற்றும் விளம்பரம் – 60 ஏனையவை–106 கள விளம்பரம்–I திட்டத்தில் சேராதது – AH பொருட்காட்சி–08 விளம்பரமும் பிரச்சாரமும் – 02 பொருட்காட்சி” (து.தொ.கு.2220 60 106 AH 0822).

8) மேலே பத்தி 6–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள ரூ.8,90,000/– (ரூபாய் எட்டு இலட்சத்து தொன்னூறு ஆயிரம் மட்டும்) தொகையிலிருந்து தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு பகுதி-1ல் விதி 99–ன் கீழ் தலா ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வீதம் சிறு கண்காட்சிகள் நடைபெறவிருக்கும் நாளுக்கு 15 நாட்களுக்கு முன்னதாக முன்பணமாகப் பெற்று செலவிட அனைத்து (சென்னை தவிர) மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலகம் மற்றும் மாவட்ட கருவூல அலுவலகத்திலிருந்து, விழா நடைபெறும் 15 நாட்களுக்கு முன்னதாக முன்பணமாகப் பெறுவதற்கு ஏதுவாக 31.01.81 ஆம் தேதியிட்ட நிதித்துறையின் கடித எண்.136493/சம்பளம்/80–1–ல் உள்ள விதிகள் சிறப்பு நிகழ்வாக தளர்த்தப்படுகின்றன. இத்தொகைகளை சம்பந்தப்பட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு முன்பணமாக வழங்குமாறு சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

9) சிறு கண்காட்சிகள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அறிவுரைப்படி நடத்தப்பட வேண்டும் என்றும், முன்பணங்களை சிறு கண்காட்சி முடிவுற்ற நாளில் இருந்து 30 நாட்களுக்குள் உரிய செலவின பட்டியல்களுடன் நேர்செய்யப்பட வேண்டும் என்றும், அனைத்து மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், இச்செலவினம் குறித்து தமிழ்நாடு நிதித்தொகுப்பு தொகுதி விதிமுறைகளையும் ஒப்பந்தப்புள்ளி வரைமுறைகளையும் தக்க வருமான வரி பிடித்தல் நடைமுறைகளையும் தவறாது பின்பற்றுமாறும் அனைத்து செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

10) இந்த ஆணையை வெளியிடுவதற்கு நிதித்துறை தனது அலுவல் சார்பு குறிப்பு எண்.142/நிதி(தவ,அநி(ம)செ/2012, நாள். 07.05.2012–ன்படி இசைவளித்துள்ளது.

//ஆளுநரின் ஆணைப்படி//

மூ. இராசாராம்
அரசுச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–9.
கணக்கு அலுவலர் (பொருட்காட்சி),
செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
நகல்:-
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு நிதித்துறை அமைச்சர், சென்னை–9.
நிதி (தமிழ், வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி)த்துறை, சென்னை–9.
நிதி (தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும்
செய்தி(வரவு செலவு (பொது–I)/(பொது–II) துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது.//

ஒம்/–
பிரிவு அலுவலர்